Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 92/2024
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4 , Page.No. 2/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் | தொழில் | கூலி |
| கிராமம் | சின்னவட்டனூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th day of May 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை )**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் ஊர்க்காரர் ஆவார். கடந்த 2023 ம் வருடம் தேதி மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் எங்கள் ஊரை கோவிந்தம்மாள் என்பவர் சென்னம்மாள் என்பவரை ஊருக்கு அழைத்து வந்தார். சென்னம்மாள் என்பவர் எங்கள் ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து தான் ரூ. 3 லட்சத்திற்கு கடன் வாங்கி தருவதாகவும், அந்த 3 லட்சத்தில் ரூ 2 லட்சமானது மானிய தொகை என்றும், அந்த கடனை பெற வேண்டும் என்றால் ஒரு நபருக்கு தலா ரூ.10,700/- செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். எங்கள் ஊரை சேர்ந்த மொத்தம் 37 பெண்கள் எதிரி கூறிய ரூ. 3 லட்சம் கடன் பெற முடிவு செய்தோம். கோவிந்தம்மாள் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதாலும் நம்பிக்கையான நபர் என்பதாலும் அவரை நம்பி பணம் கொடுக்க தயார் ஆனோம். அதன் பின்னிட்டு கோவிந்தம்மாளிடம் நாங்கள் 37 நபர்களும் சேர்ந்து தலா ரூ.10,700/- கொடுத்தோம்.

2. அந்த பணத்தை எடுத்துக்கொண்டு சென்ற கோவிந்தம்மாள் எதிரி சென்னம்மாளை திருப்பத்தூர் மதுரா மெடிக்கல்ஸ்ல் பார்த்து பணத்தை கொடுத்துள்ளார். அதன்பின்னிட்டு 2, 3 மாதங்கள் ஆகியும் பணம் செலுத்திய யாருக்கும் சென்னம்மாள்

தெரிவத்த ரூ. 3 லட்சம் கடன் தொகை பெறவில்லை என்பதால் நாங்கள் கோவிந்தம்மாளிடம் பல முறை கேட்டோம். பின்பு கோவிந்தம்மாளும் நாங்களும் எதிரியை பல முறை சந்தித்து இது தொடர்பாக கேட்டும் அவர் சரிவர பதில் கூறவில்லை. அதன்பின்னிட்டு எதிரி பல மாதங்கள் ஆகியும் பணத்தை திருப்பி தராததாலும் கடன் பெற்று தராததாலும் அவர் மீது திருப்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் அ்ளித்தோம். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நாங்கள் புகார் அளித்த பின்பு தான் போலீசார் எங்களை விசாரித்தனர். அ.சா.1 எனக்கு தெரியும் என்றாலும் எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். நாங்கள் பணத்தை அ.சா.1 கோவிந்தம்மாளிடம் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வைத்து அ.சா.1 எங்களிடம் பணம் பெற்றார் என்றால் சரியல்ல. திருப்பத்தூரில் வைத்து பணம் பெற்று எங்களிடம் பாண்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டார். நாங்கள் கோவிந்தம்மாளிடம் தான் பாண்டில் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. அ.சா.1ம் எதிரியும் அப்போது இருந்தார்கள். நான் அ.சா.1டம் பணம் கொடுத்தபோது கிளியம்மாள், அபிராமி, செல்வி, நாச்சி ஆகியோரும் என் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்கூறிய நபர்களும் கோவிந்தம்மாளிடம் பணம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரி சென்னம்மாள் நேரடியாக எங்களிடம் கடன் வாங்கி தருவதாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊருக்கு வந்து நேரில் தெரிவித்தார். அவ்வாறு எங்கள் ஊருக்கு எதிரி வந்த போது அவரிடம் பணம் கொடுக்காமல் ஏன் அ.சா.1டன் பணம் கொடுத்தோம் என்றால் அ.சா.1 நம்பிக்கையான நபர் என்பதால் அவரிடம் பணம் கொடுத்தோம். அ.சா.1 தான் எங்களிடம் பணம் பெற்றுள்ளார் என்றாலும் எதிரி எங்களிடம் பணம் பெற வில்லை என்றாலும் அ.சா.1 தன்னை காப்பாற்றி கொள்வதற்காக எதிரி மீது பொ்ய்யாக புகார் அளித்துள்ளார் எ்னறாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்ச்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 92/2024
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5 , Page.No. 2/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிளியம்மாள் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சேர்க்கானூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th day of May 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- ( எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை )**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து ஊர்க்காரர் ஆவார். கடந்த 2023ம் வருடம் தேதி மாதம் நியாபகம் இல்லை. ஒரு நாள் கோவிந்தம்மாள் என்பவர் எங்களை அணுகி ரூ 3 லட்சத்திற்கு கடன் வாங்கி தருவதாகவும் அதற்கு ஒரு நபர் தலா ரூ 10,700/- செலுத்த வேண்டும் என்றும் கூறினார். மேலும் கடன் பெற வேண்டும் என்றால் ஒரு மாதத்திற்குள் ரூ.10,700/- செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். நானும் கோவிந்தம்மாள், காமாட்சி, கிளியம்மா, சக்தி, வனரோஜா, நாச்சி, காளியம்மா, சிவரஞ்சனி மற்றும் மொத்தம் 35 நபர்கள் தலா ரூ 3 லட்சம் கடன் பெறலாம் என்று முடிவு செய்து ஒரு மாதம் கழித்து சென்னம்மாள் என்பவரிடம் தலா ரூ.10,700/- திருப்பத்தூர் மதுரா மெடிக்கல் அருகே வைத்து செலுத்தினோம். பணம் செலுத்தியவுடன் ஒரு வாரம் கழித்து கடன் வந்துவிடும் என்று தெரிவித்தார்கள். ஆனால் 2 வாரம் ஆகியும் பணம் வரவில்லை.

2. பின்பு நாங்கள் பல முறை சென்னம்மாவை பார்த்து பணத்தை கேட்டோம். ஆனால் அவர் கடன் பெற்று தரவில்லை நாங்கள் செலுத்திய பணத்தையும் திருப்பி தரவில்லை. பின்பு 11 மாதங்கள் கழித்து சென்னம்மாள் வீட்டிற்கு சென்று பணத்தை கேட்டபோது அவர் கழிவறையில் ஒழிந்து கொண்டு வரவில்லை. அதன்பின்னிட்டு

எதிரி மீது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

03.10.2023 அன்று நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். பணம் கொடுத்து 11 மாதம் கழித்து தான் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். எதிரி வாங்கி கொடுப்பதாக கூறிய கடன் என்ன கடன் என்றும், யாரால் கடன் கொடுக்கப்படுகிறது என்றும் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அவர் வங்கியின் பெயரை தெரிவிக்கவில்லை. கடன் வாங்கி தருவதாக கோவிந்தம்மாள் கொடுத்த உத்தரவாத்தின் பேரில் தான் நாங்கள் பணம் கொடுத்தோம்என்றால் சரிதான். கடன் வாங்கி தருவதாக சென்னம்மாள் எங்களிடம் நேரடியா தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் பணத்தை கோவிந்தம்மாளிடம் தான் கொடுத்தோம் என்றாலும் அவரை காப்பற்ற வேண்டி கோவிந்தம்மாள் எதிரி மீது பொய்யான புகார் அளித்ள்ளார் என்றாலும் அதற்கு ஆதராவக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறனே் என்றாலும் சரியல்ல.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 92/2024
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No. 2/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாச்சி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | மேஸ்திரி |
| கிராமம் | சேர்க்கனூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th day of May 2025
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை )**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் ஊர்க்காரர் ஆவார். எதிரி எனக்கு நேரடியாக தெரியாது .அ.சா.1 மூலமாக தான் எதிரி சென்னம்மாள் எனக்கு பழக்கம் ஆனார். கடந்த 2023-ம் வருடம் எதிரி சென்னம்மாள் எங்கள் ஊருக்கு வந்து ரூ. 3 லட்சம் கடன் வாங்கி தருவதாகவும், அந்த தொகையில் ரூ 1 லட்சம் மானிய தொகை என்றும் எனவே, ரூ 2 லட்சம் மட்டும் திருப்பி செலுத்தினால் போதும் என்று சென்னம்மாள் எங்களிடம் தெரிவித்து, கடனை பெற வேண்டும் என்றால் ஒரு நபர் ரூ.10,700/- செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் கடன் பெற விருப்பம் தெரிவித்த என்னிடமும் மற்ற 35 நபர்களிடம் எதிரி ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகம் நகல்கள் பெற்று கொண்டு மேலும் பத்திரத்தில் கையொப்பம் பெற்று கொண்டார். கிளியம்மாள், காளியம்மாள், சிவரஞ்சனி, திக்கி, பவுன், செல்வி, நாச்சி, சரோஜா உட்பட மொத்தம் 35 நபர்கள் பணம் கொடுப்பதற்கு தயார் ஆனோம். நாங்கள் அனைவரும் தலா ரூ.10,700/- சேர்ந்து எதிரியை திருப்பத்தூர் மதுரா மெடிக்கல் அருகே வைத்து பார்த்து பணத்தை கொடுத்தோம்.

2. பணத்தை கொடுத்த பின்பு 2 நாட்கள் கழித்து வருமாறு எதிரி கூறினார். அதன்பின்னிட்டு நாங்கள் எதிரியை நேரில் சந்திக்க பல முயற்சிகள் செய்தும் அவரை சந்திக்க இயலவில்லை. மேலும் செல்போனிலும் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. கோவிந்தம்மாள் தான் எதிரியை அழைத்து வந்ததால் நாங்கள் கோவிந்தம்மாளிடம் சென்று பணத்தை கேட்டோம். அதற்கு அவர் தற்போது தான் எதிரி கிடைத்திருப்பதாகவும், எதிரி அழைத்து சென்று காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாகவும் தெரிவத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் முதல் விசாரணையில் தெரிவித்த விவரங்களை தான் எனது போலீசார் விசாரணயில் தெரிவித்தேன் என்றால் சரிதான். புகார் அளித்த அன்று நான் வெளியூர் சென்றுவிட்டதால் 2 வாரங்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தனர். புகார் அளித்தபோது நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் புகார் அளித்த தினமே என்னை விசாரித்தாக தெரிவித்து இருந்தால் தவறு என்றால் சரிதான். கோவிநதம்மாள் தெரிவித்ததன் பேரில் தான் நான் பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் தெரிவித்தது போல் நான் ரூ.10,700/- கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது நான் ரூ.10,700/- செலுத்தியதாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் பணத்தை நேரடியாக கொடுக்கவில்லை என்றாலும் அ.சா.1 கோவிந்தம்மாளிடம் தான் பணத்தை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. அனைவர் முன்னிலையும் வைத்து நான் எதிரியிடம் தான் பணத்தை கொடுத்தேன். நான் பணம் கொடுத்து சுமார் ஒரு மாதம் கழித்து எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. நானும் கிளியம்மாளும் பணம் கொடுத்தோம் என்றால் சரிதான். கிளியம்மாள் என்பவருக்கும் இவ்வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். திருப்பத்தூர் மதுரா மெடிக்கல் அருகே உள்ள மற்றொரு மருந்து கடை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தம்மாள் தான் எங்களிடம் பணம் பெற்றார் என்றாலும் அவர் தப்பிபதற்காக எதிரி தமீது பொய்யான புகார் அளித்துள்ளார் என்றாலும் பணம் கொடுத்த இடமானது அ.சா.1 தெரிவித்ததின் பேரில் தான் எனக்கு தெரியும என்றாலும் நான் அங்கு சென்றிருந்தால் அதற்கு அருகாமையில் உள்ள மற்றொரு

மருந்து கடையின் பெயர் தெரிந்திருகும் என்றாலும் எனவே நான் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 92/2024
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7 , Page.No. 2/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவரஞ்சனி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் | தொழில் | கூலி |
| கிராமம் | சேர்கானூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th day of May 2025
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை )**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் ஆவார். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது. எதிரி சென்னம்மாளை அ.சா.1 மூலமாக தான் தெரியும். கடந்த 2023-ம் வருடம் கோவிந்தம்மாள் எங்களிடம் வந்து அவருக்கு தெரிந்த சென்னம்மாள் என்பவர் ரூ 3 லட்சம் கடன் வாங்கி தருவதாகவும் அதற்கு ரூ.10,700/- செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். அதன்பின்னிட்டு ஒருநாள் சென்னம்மாளை அசா.1 கோவிந்தம்மாள் எங்கள் ஊருக்கு அழைத்து வந்தார். பின்பு கடன் வாங்க விருப்பம் தெரிவித்த காமாட்சி, நாச்சி, கிளியம்மா, புஷ்பா, வனரோஜா, அபிராமி, திக்கி, உட்பட மொத்தம் 35 நபர்களிடம் எங்களது பான் கார்டு, ஆதார் கார்டு, ரேசன் கார்டு, போட்டோ பெற்றுக் கொண்டு பாண்டு பத்திரத்தில் கையொப்பம் வாங்கி சென்றார். அதன்பின்னிட்டு திருப்பத்தூர் மதுரா மெடிக்கல் அருகே வைத்து 35 நபர்களும் தலா ரூ.10,700/- சென்னம்மாளிடம் கொடுத்தோம். அதன்பின்னிட்டு 2 நாட்கள் கழித்து போன் செய்வதாக எதிரி எங்களிடம் தெரிவித்தார். ஆனால் எதிரி எங்களுக்கு போன் செய்யவில்லை. அதனால் நாங்களே அவருக்கு போன் செய்தோம். ஆனால் அவர் எங்கள் போனை எடுக்கவில்லை. அதன்பின்னிடடு பணம் கொடுத்த இடத்திற்கு

சென்று பார்க்கலாம் என்று சென்று பார்த்தோம். ஆனால் அங்கு அனைத்தும் முடிப்பட்டிருந்தது. பின்பு ஒருநாள் அவர் எங்களுக்கு கண்ணில் தென்பட்டார். அவரை நாங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அவர் மீது புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

முதல் விசாணையில் தெரிவித்த விவரங்களை தான் போலீசார் விசாணையில் தெரிவித்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் தெரிவித்ததற்கும் போலீசார் விசாரணைக்கும் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்காமல் வாக்குமூலம் பெற்றதாக தாக்கல் செய்திருந்தால் தவறு என்றால் சரிதான். எங்கள் ஊரில் வைத்து தான் அடையாள அட்டைகளை கொடுத்தோம் என்றாலும் பாண்டில் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரிதான். கோவிந்தம்மாள் தெரிவித்ததன் பேரில் தான் நாங்கள் ஆவணங்கள் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் குழுவில் மொத்தம் 12 நபர்கள் என்றால் சரிதான். அடையாள அட்டைகள் உட்பட அனைத்து ஆவணங்களும் அ.சா.1டம் கொடுத்தோம் என்றால் சரிதான். மதுரா மெடிக்கல் அருகே அல்லது எதிரே உள்ள கடைகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தம்மாள் தான் எங்களிடம் பணம் பெற்றார் என்றாலும் அவர் தப்பிபதற்காக எதிரி மீது பொய்யான புகார் அளித்துள்ளார் என்றாலும் பணம் கொடுத்த இடமானது அ.சா.1 தெரிவித்ததின் பேரில் தான் எனக்கு தெரியும் என்றாலும் நான் அங்கு சென்றிருந்தால் அதற்கு அருகாமையில் உள்ள மற்றொரு மருந்து கடையின் பெயர் தெரிந்திருக்கும் என்றாலும் எனவே நான் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.